## முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்

பி.வா.சா.1 – நடராஜன் OS.No.17/2022 நாள் : 26.11.2024

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

பிரமாண வாக்குமூலத்தில் முதல் பாராவிலும் மற்ற இடங்களிலும் இரண்டாவது மனைவி என்று குறிப்பிட்டடுள்ளது தவறு என்றால் சரியல்ல. மணிமேகலை என் முதல் மனைவி என்றால் சரியல்ல. குடும்ப நல நீதிமன்றத்தில் மணிமேகலை எனது முதல் மனைவி என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. மணிமேகலைக்கு நான் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவாகியிருக்கிறது என்றால் சரிதான். 07.04.2022 ல் A அயிட்ட சொத்தை நான் கிரையம் கொடுத்துவிட்டதாக கூறுவது பொய் என்றாலும் வாதிகளை ஏமாற்றுவதற்காக அவ்வாறு சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் 3 வது மற்றும் 4 வது பாராவில் முன்னுக்கு பின் முரணாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் 5 வது பாராவில் வாதிகள் எனது சட்டப்படியான வாரிசுகள் இல்லை என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. மணிமேகலையை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு A மற்றும் B அயிட்ட சொத்துக்களில் வாரிசு என்ற முறையில் வாதிகளுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 10 வது பாராவில் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு A அயிட்ட சொத்துக்களை எனது 2 வது மனைவி மணிமேகலையின் நகைகளை விற்று வாங்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. சேகர், சக்திவேல் ஆகியோரும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பாரா 9 ல் எனக்கும் எனது தாயாருக்கும் நடந்த செட்டில்மெண்ட் விவரங்களை சொல்லியிருப்பது இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. பாரா 10 ல் சொல்லியிருக்கின்ற பத்திர பதிவு இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதவை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்களை வாரிசு உரிமை சட்டப்படி வாதிகளுக்கு உள்ள உரிமையை நான் மறுக்க முடியாது என்றால் சரியல்ல. பாரா 11 ல் இந்து திருமண சட்ட படி மணிமேகலை எனது முதல் மனைவி என்பதால் அவரது வாரிசுகள் உரிமை பெறுவதற்கு தகுதியானவர்கள் என்றால் சரியல்ல.

மணிமேகலை எனது முதல் மனைவியே கிடையாது. நான் தாக்கல் செய்திருக்கும் 9 ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

(ஒம்) – திருமதி.T.மலர்வாலன்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி
அரியலூர்.